DECEMBER 2022 **P/ID 35317/PTL2G**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையளிக்க.

1. நாலடியார் - சொற்பொருள் கூறுக.

2. நிலையாமை என்றால் என்ன?

3. சகடக் கால் - பொருள் சுட்டுக.

4. நறவு என்பது யாது?

5. கணக்காயர் - பொருள் கூறுக.

6. உல்கு என்றால் என்ன?

7. இரு முதுமக்கள் யாவர்?

8. பாம்புக் கொடியான் - யார்?

9. ஒண்மை - பொருள் சுட்டுக.

10. மயரிகள் எனப்படுவோர் யாவர்?

11. ஊக்கமது கைவிடேல் என்று ஆத்திசூடி கூறுவது யாது?

12. விடகாரி - பொருள் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. அறம் - சொற்பொருள் விளக்குக.

14. 'கல்வி அழகே அழகு' என்று நாலடியார் கூறுவதை விளக்குக.

15. கடலின் பண்பினைப் பழமொழி எவ்வாறு சுட்டுகின்றது?

16. பண்புடைமை மனிதனுக்குப் பெருமை சேர்க்குமா? விவாதிக்க.

17. அற நூல்கள் வகுத்துரைக்கும் கருத்தாடல் நெறிகளைப் பட்டியலிடுக.

18. ஆத்திசூடியின் மொழிநடையை விளக்குக.

19. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' - கருத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. தனிமனிதனும் சமூகமும் பின்பற்ற வேண்டிய அறங்களைப் பட்டியலிடுக.

21. 'அரிமா கொடிப்புல் கறிக்குமோ' என்று நாலடியார் கூறுவதை விளக்குக.

22. என்றைக்கும் வழிகாட்டுவனவாக அறநூற் கருத்துகள் திகழுமாற்றை ஆராய்க.

23. 'அவ்வையின் அற நூல்கள் எளிமையும் இனிமையும் பயனும் நிறைந்தன' என்னும் கூற்றை மதிப்பிடுக.

24. அற நூல்களின் இலக்கிய மேன்மையைத் திறனாய்க.

———————